| சாட்சி : DW2<br>திரு.ராஜ்குமார்<br>த.பெ. திரு. அற்புத அந்தோணி | அ.வ.எண்.330/2012 | 04.11.2025 |
|---|---|---|

<u>குறுக்கு விசாரணை</u>

1) இவ்வழக்கின் 1,2 வாதிகள் பழனியாண்டியும், பிச்சையும் காலமாகிவிட்டனர் என்றால் சரிதான். மேற்படி வாதிகளின் வாரிசுகள் 3 முதல் 10 வாதிகளாக இவ்வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் வீட்டிற்காக. அதன் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. ஆதியில் புல எண்.100/9 என்பது 1ம் வாதி பழனியாண்டியின் தந்தை குழந்தைவேல் மூப்பனுக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

2) மேற்படியார் அதில் ஒரு பகுதியை 17.06.1950ல் தனது இளவல் மகளான பட்டம்மாளுக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பட்டம்மாளுக்கு குழந்தைவேல் மூப்பன் எழுதிக்கொடுத்தது 2 செண்ட் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி சங்கதி தொடர்பான ஆவணம் தான் பி.சா.ஆ.11 கிரைய ஆவணம் என்றால் சரிதான்.

3) மேற்படி பட்டம்மாளின் தாயார் பெயர் செல்லம்மாள் என்றால் சரிதான். 05.09.1980ல் 5ம் பிரதிவாதி காளிமுத்துவிற்கு மேற்படி செல்லம்மாள் கிரையம் கொடுத்தாரா என்றால் ஆமாம். மேற்படி ஆவணம் தான் பி.சா.ஆ.12 கிரைய ஆவணம் என்றால் சரிதான். வாதிக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தை எதன் அடிப்படையில் வாதிக்கு உரிமை இல்லை என்று கூறுகிறேன் என்றால் நான் காளிமுத்துவிடம் இருந்து

வாங்கியதால் வாதிக்கு உரிமை இல்லை என்று கூறுகிறேன். நான் வாதிகளின் சொத்தை அபகரிக்கவே, வழக்கு சொத்தில் வாதிகளுக்கு உரிமை இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

(வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)